# 04.
# குட்டிப்பாம்பு

நாம் சிறிய வயதில் அனைவரும் ஒன்றாக ஒரே இடத்தில் சுருண்டு கிடந்தோம். நானும் எனது சகோதரர்களும் சின்ன சின்ன பூச்சிக்களை சாப்பிட்டு தான் வளர்ந்தோம். எங்களது நாவின் நுனி இரண்டாக பிரிந்து இருக்கிறது. சின்ன சின்ன பூச்சிகள் இருக்கும் இடத்தினை இந்த நாக்கின் உதவியால் தான் அறிந்து கொள்வோம். பூச்சிகள் இருக்கும் இடத்திற்கு சென்று நாம் நாவினை நீட்டுவோம். அப்போது அந்த சின்ன சின்ன பூச்சிகள் எங்களது நாவில் ஒட்டிக்கொள்ளும். கொஞ்சம் பெரிய பூச்சிக்களை நாம் விழுங்கி விடுவோம்.

ஒருநாள் எங்களது அம்மா சந்தோஷத்துடன் புதருக்குள் வந்தாள். அவள் ஏதோ ஒரு பொதியினை வாந்தியெடுத்தாள். ம்ம்ம்.. அது எங்களது அம்மா விழுங்கிய ஒரு எலி.. ஆஹா.. என்ன சுவையாக இருந்தது. நாம் அனைவரும் அடித்து பிடித்து கொண்டு அதனை சாப்பிட்டோம்.

எமக்கு நிலத்திலே ஊர்ந்து செல்லும் ஒரு வாழ்க்கையே கிடைத்துள்ளது. எங்களுக்கு கால்கள் இல்லை. எமது வயிறு நிலத்தோடு ஸ்பரிசத்தே இருக்கிறது. நாம் ஊர்ந்து போகும் போது மரத்தில் இருந்து ஒரு இலை விழுந்தால் கூட அதனை நாம் உணர்ந்துவிடுவோம். மனிதர்கள் நடமாடும் போது இன்னும் பெரிய பெரிய விலங்குகள் நடமாடும் போது நிலம் அதிரும். அதனை எம்மால் உணர முடியும்.

ஒருநாள் அம்மா எங்களிடம் பதற்றத்தோடு ‘என்ட பிள்ளைகளே! இனியும் நம்மால் இந்த புதருக்குள் இருக்க முடியாது. மழை பெய்கிறது. அதனால் உள்ளே தண்ணீர் நிரம்பிவிடும். நாம் வெளியே போய்விடுவோம்’ என்றார். நாமும் வெளியே வந்து தலை திரும்பிய பக்கம் ஊர்ந்து சென்றோம்.

ஒருநாள் நான் காலை நேரத்திலேயே சாப்பாடு தேடி மெதுவாக ஊர்ந்து செல்ல ஆரம்பித்தேன். கொஞ்சம் கரடு முரடான நிலத்தினை ஸ்பரிசம் செய்ய வேண்டியதாயிற்று. நான் அங்கேயே சுருண்டுக் கொண்டிருந்தேன். அப்போது தவளைகளை பிடிப்பதற்கு இலேசாக இருக்கும். அப்போது யாரோ ஒருவர் கம்பொன்றினை எடுத்து என் வயிற்றுக்கு கீழே வைத்து என்னை அசைத்தார்கள். நான் நன்றாக பயந்துவிட்டேன். நான் அந்த கம்பின் மீது படர்ந்து கொண்டேன். ‘அப்பா இது ஒரு விரியன் குட்டிதானே’ என கம்பை வைத்திருந்த சிறுவன் கத்தினான். ‘ஆம்.. மகன்... முற்பிறப்புக்களில் பாவம் செய்ததால் கிடைத்த பிறப்புக்கள் தான்’ ‘ஆனால் அப்பா விசம் நிறைஞ்ச

பாம்ப பாத்திட்டும் கொல்லாமல் இருந்தால் அது மடத்தனம் என்று அன்று சிவா சொன்னான். அப்படி கொல்லாமல் விட்டால் அவை பெரிதாகினால் இதைவிட கொடிய விடம் இருக்குமாம்... அதனால் அப்பா நாம் இந்த விரியன் குட்டி பெரிதாக வளருவதற்கு முன்னர் கொன்றுவிடுவோம்'.

'இல்லை மகன் அப்படி சொல்லாதே. இப்போது நான் அந்த குட்டி பாம்பை இந்த கம்பால் எடுத்து வேற எங்காவது தூரத்தில விட்டு வருகிறேன். இந்த பாம்புக்கு கேட்கிற மாதிரி கந்த பரித்தத்தினையும் சொல்ல போகிறேன்' என்று அந்த பெரியவர் இனிமையான குரலில் 'விருபக்கேஹி மே மெத்தங் ஏராபதேஹி..' என ஏதோ கூறினார். அதனை அவர் சொல்லும் போது என்னிடமிருந்த பயம் கொஞ்சம் கொஞ்சமாக இல்லாமல் போய்விட்டது. என்னை ஏதாவது துன்புறுத்தினால் கடிப்பேன், என்றுதான் நான் நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால் நான் நினைத்தது தவறு. இவர்கள் மிகவும் நல்லவராக அல்லவா இருக்கிறார்கள்.

என்னிடம் விசப்பற்கள் இருந்ததாக எனக்கு இதுவரை தெரியாது. சம்சாரத்தில் செய்த பாவங்களினால் தான் எனக்கு இந்த பாம்பு வாழ்க்கை கிடைத்தது. எனது வாழ்க்கையின் இறுதிகாலம் மிகவும் துக்கமாகவே அமையும். நான் யாரிடமாவது அடிவாங்கி சாகலாம். அப்படியில்லாவிட்டால்... பன்றிக்கோ ஒரு கீரிக்கோ உணவாகிவிடுவேன். அப்படியில்லாவிட்டால் எங்காவது சுகயீனமுற்று படுத்திருக்கும் போது சின்ன சின்ன பூச்சிகள் என்னை உணவாக்கிக்கொள்ளும். எப்படியோ நான் மிகுந்த வேதனையோடுதான் சாக வேண்டிவரும்...

**மனிதர்களை காணும் போது சுருண்டு விடுவேன்.**

**காலில்லாமல் கவலையுடனே ஊர்ந்து செல்கிறேன்.**

**செய்த பாவம் பின்னால் வருவதால் பாம்பாக பிறந்தேனே.**

**விசப்பற்கள் இருப்பதாலயே சாகவும் போகிறேனே**

**பஞ்சபாவம் தச அகுசல் செய்து பாம்பாகி விட்டேனே.**

**சர்ப உலகில் அனுபவிக்கும் துயர் யார்தான் அறிவாரோ..?**

**எருதுவின் பின் கட்டப்பட்ட வண்டியினை போல் செய்த பாவங்கள் பின்னே தொடர்ந்து வருகிறதே..!**